*பெண்களின் உரிமைகள்:*

- புகார் அளிக்கும் உரிமை.
- ரகசியம் காத்தல்.
- பாதுகாப்பான பணியிடம்.
- பழிவாங்கல் இல்லாத சூழல்.

### POCSO சட்டம், 2012

18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு எதிரான அனைத்து பாலியல் குற்றங்களுக்கும் இந்தச் சட்டம் பாதுகாப்பு வழங்குகிறது.

### குழந்தைகளுக்கான பொதுவான உரிமைகள்

- அடையாள ரகசியம் காத்தல்: குழந்தையின் பெயர், முகவரி போன்ற விவரங்கள் வெளியிடப்படக் கூடாது.
- துணையாக யாரையாவது வைத்துக்கொள்ளும் உரிமை: வழக்கு நடவடிக்கைகளில் பெற்றோர் / பாதுகாவலர் / நம்பிக்கைக்குரிய ஒருவரைத் துணையாக வைத்துக்கொள்ள உரிமை உண்டு.
- சைகை மொழி / மொழிபெயர்ப்பு உதவி: தேவையெனில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு சைகை மொழி விளக்கமளிப்பவர் அல்லது சிறப்பு ஆசிரியரை வைத்துக்கொள்ளலாம்.
- குற்றம் சாட்டப்பட்டவரை நேரில் காணாமல் இருப்பது: வாக்குமூலம் வழங்கும்போதோ / இதர விசாரணையின் போதோ குழந்தையின் முன் குற்றவாளியை நிறுத்தக்கூடாது.
- அபராதம் விதிக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை: குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் செய்யவில்லை என்று தெரியவந்தால் அதற்காக குற்றம் சாட்டிய குழந்தைக்கு அபராதம் விதிக்கக்முடியாது.
- தகவல் பெறும் உரிமை: பாதிக்கப்பட்டவருக்கு வழக்கின் நிலை, பாதுகாப்பு இல்லம், ஆதரவு தேர்வு போன்ற விஷயங்களில் தகவல் பெற உரிமை உண்டு.
- சட்ட ஆலோசனை உரிமை: குழந்தைக்கு இலவச சட்ட உதவி மற்றும் வழக்கறிஞர் பெறும் உரிமை உண்டு.
- இழப்பீடு பெறும் உரிமை: உடல், மன உளைச்சல், மறுவாழ்வு போன்றவற்றிற்கு இழப்பீடு பெறலாம்.
- குற்றம்சாட்டப்பட்ட குழந்தைக்கு உரிமை: குழந்தை குற்றவாளி என்று குற்றம் சாற்றப்பட்டால், அதன் பிறகு அந்தக் குாந்தை சிறார் நீதி (குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும். போக்சோ (POCSO) சட்டத்தின்படி எந்த ஒரு குழந்தையும் குற்றம் சாட்டப்படக்கூடாது.

### இந்த நிகழ்வில் யாரெல்லாம் பங்கேற்கலாம்:

- உயிர்வாழ்வோர் / பாதிக்கப்பட்டவர்கள்.
- பெண்கள் குழுக்கள்.
- தனித்து வாழும் பெண்கள்.
- மீனவ பெண்கள்.
- சமூக செயற்பாட்டாளர்கள்.
- இளைஞர்கள்.
- தொழிலாளர் அமைப்புகள்.
- மக்கள் இயக்கங்கள்.
- வழக்கறிஞர்கள்.
- ஆசிரியர்கள்.
- குழந்தைகள் பாதுகாப்பு ஆர்வலர்கள்.
- பொதுமக்கள்.

### கூட்ட விவரங்கள்

தேதி:

நேரம்:

இடம்:

தொடர்பு:

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்:

மாவட்ட உதவி எண்:

மாநில உதவி எண்: +91 70100 78592

**அவமதிப்பு, வன்முறை, மிரட்டல், சாதிய பாகுபாடு அனைத்திருக்கும் எதிராக ஒன்றிணைவோம்! நீதியை வென்றெடுப்போம்!**

சிறகுகள் மற்றும் குடிமக்கள் விழிகண் குழு

e: contact@cvmc.in | m: +91 70100 78592 | w: cvmc.in

# மாவட்ட அளவிலான பாதிக்கப்பட்டோர் மன்றம் சட்ட விழிப்புணர்வு மற்றும் உரிமை பாதுகாப்பு

***“பட்டியல் சாதி / பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள், குடும்ப வன்முறை, பணியிட பாலியல் தொல்லை மற்றும் குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களுக்கு எதிராக ஒன்றிணைவோம்!”***

### அன்பார்ந்த தோழர்களே! வணக்கம்!

சாதி வன்கொடுமை, குடும்ப வன்முறை, பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோருக்கான ஆதரவு மற்றும் வழிகாட்டுதல் மன்றத்திற்கு அன்புடன் அழைக்கிறோம்.

பாதிக்கப்பட்டவர்கள் மௌனமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. சட்டம் நமக்கு உரிமைகளையும் பாதுகாப்பையும் வழங்குகிறது. இந்த உரிமைகளை மக்களிடம் கொண்டு செல்லவும், பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவு அமைப்பை உருவாக்கவும், மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், மாவட்ட அளவிலான பாதிக்கப்பட்டோர் மன்ற கூட்டம் நடத்தப்படுகிறது.

### ஏன் இந்த பாதிக்கப்பட்டோர் மன்றம் அவசியம்?

சாதி அடக்குமுறை, குடும்ப வன்முறை, பாலியல் தொல்லை, குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்கள் போன்ற அநீதிகளை எதிர்கொள்ளும் பலர் பயம், தனிமை, அவமானம் மற்றும் சமூக அழுத்தங்களால் தங்களது உரிமைகளை பயன்படுத்த முடியாமல் உள்ளனர்.

இதனால்,

- பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.
- மிரட்டப்படுகிறார்கள்.
- சமரசத்திற்கு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.
- நீதிமன்ற மற்றும் காவல் நிலைய செயல்முறைகள் குறித்து தெரியாமல் தவிக்கிறார்கள்.
- மனநல பாதிப்புகளுடன் வாழ நேரிடுகிறது.

இந்த சூழலில், பாதிக்கப்பட்டோர் ஒருவருக்கொருவர் ஆதரவாக நின்று, சட்ட மற்றும் சமூக பாதுகாப்பு

வலையமைப்பை உருவாக்குவது மிகவும் அவசியம். அதற்காகவே இந்த மாவட்ட அளவிலான பாதிக்கப்பட்டோர் மன்றம் அமைக்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் தனியாக போராட வேண்டிய நிலையை மாற்றுவது இந்த மன்றத்தின் முக்கிய நோக்கமாகும்.

### நோக்கம் என்ன?

- பாதிக்கப்பட்டவர்கள் அச்சமின்றி தங்களது அனுபவங்களை பகிரக்கூடிய, கேட்கப்படக்கூடிய மற்றும் மதிக்கப்படக்கூடிய இடம் உருவாக்குதல்.
- சட்ட உரிமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- பெண்கள், குழந்தைகள், SC/ST சமூகத்தினருக்கு ஆதரவு வலையமைப்பு உருவாக்குதல்.
- மிரட்டல் மற்றும் சமரச அழுத்தங்களுக்கு எதிராக ஒன்றிணைதல்.
- மனநல மற்றும் சட்ட ஆதரவு வழங்குதல்.
- மாவட்ட அளவிலான மக்கள் ஒருங்கிணைவை கட்டியெழுப்புதல்.

### என்ன பயன்?

- பாதிக்கப்பட்டவர்கள் அச்சமின்றி பேச முடியும்.
- நீதிக்கான அணுகல் அதிகரிக்கும்.
- உரிய நிவாரணங்கள் மற்றும் இழப்பீடு உடனடியாகப் பெற முடியும்.
- சட்ட உரிமைகள் மக்களிடம் சென்று சேரும்.
- மிரட்டல்களுக்கு எதிராக கூட்டுப் பாதுகாப்பு உருவாகும்.
- சமூக நீதி மற்றும் மனித மாண்பு வலுப்படும்.

## முக்கிய சட்டங்கள்

### பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989

தலித் மற்றும் பழங்குடி சமூகத்தினருக்கு எதிரான:

- சாதி அவமதிப்பு.
- தாக்குதல்.
- நில அபகரிப்பு.
- பெண்களுக்கு எதிரான வன்முறை.
- சமூக புறக்கணிப்பு.

போன்ற கொடுமைகளுக்கு எதிராக இந்தச் சட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

### முக்கிய உரிமைகள்

- யார் வேண்டுமானாலும் எந்த காவல் நிலையத்திலும் FIR பதிவு செய்யும் உரிமை.
- வழக்கின் அனைத்து நிலைகளிலும் பயணத்தொகை மற்றும் பராமரிப்பு தொகை (தினக்கூலி, உணவு செலவு உட்பட) பெரும் உரிமை.
- நிவாரணத் தொகை பெரும் உரிமை.
- கொலை, பாலியல் வன்கொடுமை, உடல் ஊனம் மற்றும் தீவைப்பு போன்ற கொடூர குற்றங்களால் பாதிக்கப்பட்டோருக்கு சமூகப் பொருளாதார மறுவாழ்வு (ஓய்வூதியம், இலவச கல்வி, அரசு வேலை, வீடு, நிலம் மற்றும் முதல் மூன்று மாதங்களுக்கான அடிப்படை வசதிகள்) பெரும் உரிமை.
- பாதிக்கப்பட்டவர், சார்ந்தோர், சாட்சி மற்றும் உதவும் நபர்களுக்கான பாதுகாப்பு பெரும் உரிமை.
- இலவச சட்ட உதவி மற்றும் விரும்பிய வழக்கறிஞரை வைத்துக்கொள்ளும் உரிமை. இதற்கு அரசே வழக்கறிஞர் கட்டணம் செலுத்தும்.
- அரசு சாரா அமைப்புகள் உதவிக்கு வைத்துக் கொள்ளும் உரிமை.
- சிறப்பு நீதிமன்ற விசாரணை.

### குடும்ப வன்முறை தடுப்பு சட்டம், 2005.

குடும்பத்தில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் எந்த ஒரு வன்முறையும் குற்றமாகும். இதில் அடங்குவது:

- உடல் வன்முறை: அடித்தல் அல்லது தாக்குதல்.
- மன உளைச்சல்: தினமும் திட்டி மனவேதனை கொடுத்தல்.
- பொருளாதார கட்டுப்பாடு: பணம் தராமல் அல்லது வேலைக்கு செல்ல விடாமல் தடுத்தல்.
- பாலியல் வன்முறை.
- வீட்டிலிருந்து வெளியேற்ற முயற்சித்தல்.

### இந்த வன்முறைகளுக்கு எதிராக உங்களின் உரிமைகள்

- பாதுகாப்பு உத்தரவு பெறும் உரிமை: கணவன் அல்லது குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் வன்முறை செய்யக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவு வழங்கலாம். மிரட்டல், தொந்தரவு அல்லது தொடர்பு கொள்ளுவதையும் தடுக்க சட்ட பாதுகாப்பு பெறலாம்.
- வீட்டில் வாழும் உரிமை: திருமணமான பெண்ணை வீட்டிலிருந்து வெளியேற்ற யாருக்கும் உரிமை இல்லை. அந்த வீடு கணவன் அல்லது கணவன் வீட்டாரின் பெயரில் இருந்தாலும், பெண்களுக்கு அங்கு பாதுகாப்பாக வாழ உரிமை உண்டு.
- பராமரிப்பு தொகை பெறும் உரிமை: பெண்ணின் உணவு, குழந்தைகள் கல்வி, மருத்துவம் மற்றும் அன்றாட செலவுகளுக்காக மாதாந்திர பண உதவி கேட்கலாம்.
- வேலை இல்லாத அல்லது பொருளாதாரம் இல்லாமல் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதிமன்றம் பராமரிப்பு தொகை வழங்க உத்தரவிடலாம்.
- காவல் பாதுகாப்பு பெறும் உரிமை
- பெண்ணின் உயிர் அல்லது பாதுகாப்புக்கு ஆபத்து இருந்தால் காவல்துறை பாதுகாப்பு வழங்க வேண்டும்.
- மிரட்டல் அல்லது தாக்குதல் நடந்தால் உடனடி போலீஸ் நடவடிக்கை பெறலாம்.
- இலவச சட்ட உதவி பெறும் உரிமை.
- பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அரசு சார்பில் இலவச வழக்கறிஞர் மற்றும் சட்ட ஆலோசனை வழங்கப்படும்.
- புகார் அளிப்பது, நீதிமன்ற மனு தாக்கல் செய்வது போன்ற செயல்களில் சட்ட உதவி பெறலாம்.

### POSH சட்டம், 2013

பெண்கள் பணியிடங்கள், பணிக்கு செல்லும் வழி, சந்தை, விவசாய நிலம் உட்பட அனைத்து பணி தொடர்பான இடங்களிலும் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வேண்டாத தொடுதல், பாலியல் பேச்சு, மிரட்டல், சமூக ஊடக தொல்லை, போன்ற செயல்கள் குற்றமாகும்.